2015 செப்டம்பர் 18] [திரு. அ. கணேஷ்குமார்]

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ்.. விஜயதரணி அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. உட்காருங்கள். (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருப்பவற்றை நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். பதில் வர, வர நான்தான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன் இல்லையா? அவ்வாறெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது.

3. கவன ஈர்ப்பு

தருமபுரி மாவட்டம், அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தருமபுரி மாவட்டம், அரூர்-ஊத்தங்கரை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் 1983 முதல் 2003 வரை மாலிப்டினம் கனிம இருப்பு குறித்து இந்திய புவியியல் துறை மற்றும் இந்திய கனிம பகுப்பாராய்ச்சி நிறுவனம் ஆய்வு மேற்கொண்டது. முதற்கட்ட ஆய்வின் அடிப்படையில் வேலம்பட்டி கிராமத்தில் 1.2 கிலோ மீட்டர் நீளமும், 320 மீட்டர் அகலமும் கொண்ட பகுதியில் மாலிப்டினம் படிம கனிமத் தாது இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

மேலும், வேலம்பட்டி தெற்குப் பகுதியிலும் வெள்ளக்கால் மத்திய பகுதியிலும் மாலிப்டினம் கனிம இருப்பு குறித்து,

2008-2009 ஆம் வருடம் இந்திய புவியியல் துறையால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி ஆய்வின்மூலம் வேலம்பட்டி தெற்குப் பகுதியில் 350 மீட்டர் நீளமும், 50 முதல் 164 மீட்டர் ஆழமும் கொண்ட பகுதியில் மாலிப்டினம் கனிமம் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. மேற்கண்ட ஆய்வில் கண்டறியப்பட்ட மாலிப்டினத்தின் இருப்பு நிலை மேற்படி பகுதியில் தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தால், மீண்டும் இந்திய புவியியல் ஆய்வுத் துறையால் விரிவான ஆய்வுப் பணி மேற்கொண்டு மாலிப்டினம் கனிமத்தின் இருப்பு குறித்து உறுதி செய்து அறிக்கை தருமாறு அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்திய புவியியல் ஆய்வுத் துறை வேலம்பட்டி வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் விரிவான ஆய்வுப் பணி மேற்கொள்ள வாய்ப்புள்ளது என அரசிற்கு தெரிவித்துள்ளது.

எனவே, இந்திய புவியியல் ஆய்வுத் துறையால் தருமபுரி மாவட்டம், அரூர்-ஊத்தங்கரை, வேலம்பட்டி வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மொத்த மாலிப்டினம் கனிம இருப்பு உறுதி செய்யப்பட்ட விரிவான அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர், அதன் அடிப்படையில் அரசு விதிகளுக்குட்பட்டு, மாலிப்டினம் கனிமத் தொழிற்சாலை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர்-ஊத்தங்கரை, வேலம்பட்டி பகுதிகளில் கிட்டத்தட்ட 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாலிப்டினம் raw material, கிராபைட், lead போன்ற கனிமங்களுடன் சேர்ந்திருக்கிறது. Silver white ஆக இருக்கக்கூடிய இந்தக் கனிமம் பல்வேறு தொழில்நுட்பங்களுக்குப் பயன்படுகிறது. இதனை Titanium-உடன் இணைக்கும்போது விமானம் செய்வதற்குப் பயன்படுகிறது. வேறு பல பணிகளுக்கும் பயன்படக்கூடிய மிக முக்கியப் பொருள். ஸ்டீல், காஸ்டிக் அயர்ன், சூப்பர் அலாய்ஸ் ஆகியவற்றுடன் சேர்த்தும் இது பயன்படுகிறது. எனவே, மாலிப்டினம் raw material-ஐ எடுத்து, டாமின் நிறுவனத்துடனோ

2015 செப்டம்பர் 18] [திரு. க. பீம்ராவ்]

அல்லது மத்திய அரசுடனோ சேர்ந்து பயன்படுத்தலாம். Letter No. 6957 MMA2. 2012-ல் Geological Survey இது சம்பந்தமாக ஆய்வு செய்து அறிக்கையை அரசுக்குக் கொடுத்திருக்கிறது. எனவே, அங்கே ஒரு தொழிற்சாலையைத் தொடங்கும்போது, அங்கிருக்கக்கூடிய 70 இலட்சம் டன் மாலிப்டினம் பயன்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக ஈர்த்து அமைகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் உள்ள மூன்று கிராமங்களில் ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டது. மத்திய அரசினுடைய அந்த ஆய்வு அறிக்கையின்படி, பொருளாதார ரீதியாக இலாபகரமாக இல்லையென்ற காரணத்தினால், மத்திய அரசு மீண்டும் அதை ஆய்வு செய்ய வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றது. ஆய்வு செய்வதற்குத் தேவைப்படும் தொகையில், மத்திய அரசு பாதி தொகையும், மாநில அரசு பாதி தொகையும் வழங்க வேண்டும். மாநில அரசின் பாதி தொகையை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதி அளித்திருக்கின்றது. அதை மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்து, அந்த ஆய்வுக்குப் பின்புதான் முடிவெடுக்கப்படும்.

புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற மத்திய அரசு, இப்போது பட்டா நிலங்களுக்குக் கீழே இருக்கின்ற கனிமங்களாக இருந்தாலும், அது tender cum auction என்ற புதிய நிபந்தனையைக் கொண்டு வந்திருக்கின்றது. அப்படி அது ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, பொருளாதார ரீதியாக இலாபகரமாக இருந்தாலும்கூட டெண்டர் முறைதான் பின்பற்றப்படும். அந்த டெண்டரில் தனியாரும் பங்கு பெறலாம், அரசும் பங்கு பெறலாம். யாருக்குக் கிடைக்கும் என்பது குறித்து அதன் பின்புதான் முடிவு செய்யப்படும். கிட்டத்தட்ட 194 ஏக்கர் பட்டா நிலமும், 40 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலமும் இருக்கின்றது. இப்போது 10 ஏக்கர் அளவிலான பட்டா நிலத்தில் ஆய்வு செய்தபோது பொருளாதார ரீதியாக இலாபகரமாக இல்லையென்று மத்திய அரசு அறிக்கை அளித்திருக்கின்றது.

[திரு. பி. தங்கமணி] [2015 செப்டம்பர் 18

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பகுதியில் தொழிற்சாலை வரவேண்டும் என்பதற்காக மீண்டும் ஆய்வு செய்யுங்கள், அதற்குண்டான தமிழ்நாடு அரசினுடைய பங்குத் தொகை எவ்வளவோ அதைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கின்றது. மத்திய அரசும் மீண்டும் ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறது. எனவே, ஆய்வுக்குப் பின்புதான் தகுந்த முடிவு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2015-2016, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவின் அமுதாக, ஆற்றல் உருவாக, இசையின் மொழியாக, ஈகையின் திறமாக, உரிமைக் குரலாக, ஊக்கம் ஒளியாக, (மேசையைத் தட்டும் ஒலி) எளிமை வடிவாக, ஏற்றத்தின் வழியாக, ஐ.நா. சபையின் தீர்மானமாக, ஒற்றுமைக் கீதமாக, ஓங்கார நாதமாக, ஔவைத் தமிழாக, தமிழ் கூறும் நல் உலகை தவமிருந்து காத்துவரும் தங்கமனத் தலைவி தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)